[1984 மார்ச் 20

கோவை மாநகரில் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்தும் திட்டம்

364—(*வினா எண். 15338)—திரு. கு. ரமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்தில் கிழக்கு சட்ட மன்றத் தொகுதியில் பல குடிசைப் பகுதிகள் இருப்பதால் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் அத் தொகுதியிலும், கோவை மாநகரத்தில் மற்ற பகுதிகளிலும் அமுல் நடத்த ஏதாவது திட்டமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ) ஆம்.

(ஆ) 1984—85-ல் கோவை மாநகராட்சியில் 33 குடிசைப் பகுதிகளில் ரூ. 47.08 லட்சங்கள் செலவில் மேம்பாட்டுப் பணிகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் செய்யும். இதற்கென குடிசைப் பகுதி மாற்று வாரியம் நிதி நிலை அறிக்கையில் போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தில் ஏற்கெனவே பல நூற்றுக்கணக்கான குடிசைகள் மாற்றி அமைக்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும் இன்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, பல பகுதிகள், கோவை மாநகரத்தில் குடிசைப் பகுதிகளாக இருந்து வருவதனால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்தக் கால அளவுக்குள் முயற்சியெடுத்து நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரையில் இந்தக் குடிசைமாற்றுப் பணிகளைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செய்து கொண்டிருந்தது. இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் பேரில் சென்னையில் நடைபெறுகிற குடிசை மாற்று வாரியப் பணியைப் போல், இங்கேயிருக்கிற குடிசை மாற்று வாரியம் தமிழகத்தினுடைய 13 நகரங்களைத் தேர்ந்தெடுத்து, அதிலே கோவை மாநகராட்சியில் 33 குடிசைப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, வருகிற 1984—85-ஆம் ஆண்டில் அவற்றை நிறைவேற்றும் நடவடிக்கைகள் அனைத்திலும் ஈடுபட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

1984 மார்ச் 20]

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த 1985 ஆம் வருடத்திற்குள்ளே அதை நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யப் படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்தக் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்பதில் என்ன என்ன அடங்கி இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அந்தக் குடிசைகளைப் பூரா அகற்றி, தனி வீடுகளை ஏற்கனவே கட்டியிருக்கிற மாதிரி, வீடுகளைக் கட்டிக் கொடுப்பதா அல்லது அதற்கு அடிப்படையான இடங்களை ஒழுங்குபடுத்தி, அதிலே குடிசை போட்டிருந்தவர்கள் தங்களுடைய வீடுகளை அமைத்துக் கொள்வதற்குக் கடன் கொடுத்து உதவுவதா? என்ன என்ன முறையிலே அந்தத் திட்டங்கள் இருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்வான இடங்களிலே இருக்கிற குடிசைகளை மாற்றி மேட்டு இடங்களிலே வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக ரூ. 10,000 அளவில் தருவதற்கும், அதே போல் குடிசைப் பகுதியாக இருக்கிற இடங்கள் தனியாருடைய இடங்களாக இருந்தால், அதை மாற்றி, அந்தக் குடிசை வாசிகளுக்குச் சொந்தமாக்கும் வகையில், அந்தக் குடிசைப் பகுதிகளை மேம்படுத்தும் திட்டமும் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகரம் இப்பொழுது பல பஞ்சாயத்துக்களை சேர்த்து, ஆட்ட் ஏரியாக்களைச் சேர்த்து, பெரிய நகரமாக வளர்ந்து வருகிறது. இந்த முழுப் பகுதியிலே இருக்கிற குடிசைகளுடைய எண்ணிக்கை கணக்கிடப்பட்டுள்ளதா? மாற்று வீடுகள் கட்டுவதற்கான நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசு, ஏதாவது நிலத்தை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட விவரப்படி கோவை மாநகராட்சியில் 80 பகுதிகளைக் குடிசைப் பகுதிகளாக அறிவித்து, அதிலே இப்பொழுது 1984–85 ஆம் ஆண்டில் 33 குடிசைப் பகுதிகளில் மட்டும் இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான 33 பகுதிகளுடைய பெயர்களும் அதற்காகச் செலவு செய்யப்படுகிற விவரமும் என்னிடத்திலே இருக்கின்றது. அது நீண்ட பெரிய பட்டியலாக இருக்கும். ஆகவே, தனிப்பட்ட முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பார்களானால் முழு விவரமும் அவர்களுக்குத் தரப்படும்.

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS